பிற்பகல் 12—20

3. அறிவிப்பு

'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் நிலையினை உருவாக்க, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பெற்றுள்ள அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் உள்ள ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக, இன்றைக்கு (8—1—2020) நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பெற்றுள்ள, அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் உள்ள ஆறு ஆண்டறிக்கைகள்/ தணிக்கை அறிக்கைகளின் ஐந்து நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன. இவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்று காலை 10—00 மணிக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*